


**28.03.2025**

## தலைப்புச்செய்திகள்

- தாய்லாந்து மற்றும் இலங்கை நாடுகளுக்கு பிரதமர் திரு.நரேந்திரமோடி வரும் 3ஆம் தேதி முதல் நான்கு நாள் அரசு முறை பயணம் மேற்கொள்கிறார்.
- இந்திய துறைமுக மசோதா 2025 இன்று மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டது.
- தமிழ்நாட்டில் 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் இன்று தொடங்கின.
- தமிழ்நாடு தொழில் வளங்களுடன் முன்னேற்றப்பாதையில் செல்வதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னையில் இன்று சென்னை சூப்பர் கிங்ஸ் - ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை எதிர்கொள்கிறது.

## இனி விரிவான செய்திகள்

***********

பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி நான்கு நாள் அரசு முறை பயணமாக வரும் 3ஆம் தேதி தாய்லாந்து மற்றும் இலங்கை நாடுகளுக்கு பயணம் மேற்கொள்கிறார்.

தமது பயணத்தின் முதற்கட்டமாக பாங்காக்கில் நடைபெறும் 6ஆவது பிம்ஸ்டெக் உச்சிமாநாட்டில் வரும் 4ஆம் தேதி பங்கேற்க உள்ளார்.

தொடர்ந்து இலங்கை செல்லும் பிரதமர் அந்நாட்டு அதிபர் அனுர குமார திசநாயக்கேவை சந்தித்து இருதரப்பு உறவுகள் குறித்து முக்கிய பேச்சுவார்த்தை மேற்கொள்கிறார்.

அனுராதபுரத்தில் இந்திய நிதி உதவியுடன் செயல்படுத்தப்படும் பல்வேறு மேம்பாட்டு திட்டங்களையும் திரு.நரேந்திரமோடி தொடங்கிவைக்க உள்ளார்.

***********

**பிரதமர் - மன்-கீ-பாத்**

பிரதமர் திரு.நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 120-வது முறையாக நாளை மறுநாள் உரையாற்றுகிறார்.

பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை 18 00 11 78 00 என்ற இலவச எண், mygov இணையதளம், நமோசெயலி உள்ளிட்டவைகளில் இன்றுமாலை வரை தெரிவிக்கலாம்.

***********

**சர்பானந்த சோனோவால்**

இந்திய துறைமுக மசோதா 2025 இன்று மக்களவையில் அறிமுகம் செய்யப்பட்டது.

துறைமுகங்கள் தொடர்பான சட்டத்தை ஒருங்கிணைத்தல், அதன் வளர்ச்சியை ஊக்குவித்தல் வணிகம் செய்வதை எளிதாக்கும் வகையில் இம்மசோதாவை இத்துறைக்கான அமைச்சர் திரு.சர்பானந்தசோனோவால் இன்று அறிமுகம் செய்தார்.

நாட்டின் கடற்கரை எல்லை பகுதிகளில் உகந்த பயன்பாட்டை உறுதி செய்யவும், துறைமுகங்கள் அல்லாத கடல்சார் வாரியங்களுக்கு அதிகாரம் அளிக்கவும் கட்டமைக்கப்பட்ட துறைமுக மேம்பாட்டு வளர்ச்சிக்கும் இம்மசோதா வழிவகை செய்யும்.

மேலும் பேரிடர் அவசர நிலைகள் பாதுகாப்பு தரவுகளை நிர்வகித்தல் போன்றவற்றிற்கும் இம்மசோதா வழிகோலும்.

***********

**மாநிலங்களவை**

மேவார் மன்னர் ரானா சங்காவுக்கு எதிராக சமாஜ்வாடி உறுப்பினர் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து உறுப்பினர்கள் எழுப்பிய அமளி காரணமாக மாநிலங்களவை நண்பகல் 12 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

இன்றுகாலை அவை கூடியதும் இப்பிரச்சனையை எழுப்பிய பிஜேபி உறுப்பினர்கள் திரு.சுமன் தமது கருத்துக்காக மன்னிப்பு கோர வேண்டும் என்று வலியுறுத்தினர்.

அப்போது பேசிய அவைத்தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் தேச தலைவர்களை அவமதிக்கும் வகையில் கருத்து தெரிவிப்பதை தவிர்க்க வேண்டும் எனவும் இதுபோன்ற தலைவர்கள் குறித்து பேசும்போது உறுப்பினர்கள் மிகுந்த கவனத்துடன் செயல்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

மக்களின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில் கருத்துக்களை தெரிவிக்க வேண்டாம் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு.கிரண் ரிஜிஜூ பேசுகையில் உறுப்பினர்கள் அவைத்தலைவரின் வழிகாட்டுதலின்படி செயல்பட வேண்டும் எனவும் தேச தலைவர்களை அவமதிக்கும்செயலில் ஈடுபட வேண்டாம் எனவும் கேட்டுக்கொண்டார்.

இதுபோன்ற கருத்து தெரிவிப்பவர்களில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்கட்சிகள் கண்டிக்க வேண்டும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதனையடுத்து பேசிய எதிர்கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே நாட்டிற்காக பாடுபட்டவர்களை அனைவரும் மதிக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

எனினும் அவை உறுப்பினருக்கு எதிராக சிலர் சட்டத்தை தங்களது கையில் எடுத்துக்கொள்வது சரியல்ல என்றும் திரு.மல்லிகார்ஜுன கார்கே குறிப்பிட்டார்.

***********

**இஸ்ரோ**

விண்வெளியில் விண்கலன்களை ஒன்றிணைக்கும் திட்டத்தின் ஒருபகுதியாக **ரோலிங்** பரிசோதனையை இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையம் வெற்றிகரமாக மேற்கொண்டிருப்பதாக **இஸ்ரோ தலைவர் திரு.நாராயணன்** தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து பேசிய அவர், பல்வேறு சூழல்களிலும் விண்கலன்களை ஒன்றிணைப்பதற்கு, குறிப்பாக சந்திராயன் 4 விண்கலத்தை அனுப்புவதற்கு இதுபோன்ற சோதனைகள் அவசியம் என்றார்.

இந்த சோதனைகளின் மூலம் பெறப்படும் தரவுகள், இஸ்ரோ தனது தரைக்கட்டுப்பாட்டு மையத்தில் பல்வேறு மென்பொருட்களை பயன்படுத்த உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

***********

10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு

தமிழ்நாட்டில் 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் இன்று தொடங்கின.

மாநிலும் முழுவதும்4 ஆயிரத்து 113 தேர்வு மையங்களில்9 லட்சத்து 13 ஆயிரத்து 36 மாணாக்கர் இத்தோவை எழுதுகின்றனர்.

பொதுத்தேர்வு எழுதும் மாணாக்கருக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

சென்னை திருவல்லிகேணியில் தேர்வு கூடத்தை இன்று நேரில் ஆய்வு செய்த திரு.அன்பில்மகேஷ் பொய்யாமொழி கோடை வெயிலை கருத்தில் கொண்டு தொடக்க பள்ளி மாணாக்கருக்கான தேர்வுகளை முன்கூட்டியே நடத்த சூழலுக்கு ஏற்ப ஆலோசித்து முடிவெடுக்கப்படும் என்று கூறினார்.

திருச்சி உட்பட அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சித்தலைவர்கள் தேர்வெழுதும் மையங்களை இன்று பார்வையிட்டு ஆய்வுசெய்தனர்.

இதனிடையே தேர்வு குறித்து தேர்வெழுதிய மாணாக்கர் எமது செய்திபிரிவிடம் பேசுகையில்

வாய்ஸ்

***********

முதலமைச்சர் - மாநாடு

தமிழகத்தை அடுத்த 3 ஆண்டுகளில் ஒரு ட்ரில்லியன் பொருளாதார மாநிலமாக உயர்த்தும் வகையில், அரசு செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் தென்னிந்திய தொழில் கூட்டமைப்பு ஆண்டு மாநாட்டை இன்று தொடங்கிவைத்து உரையாற்றிய அவர், பொருளாதார வளர்ச்சியோடு, பெண்கள் முன்னேற்றம், உள்ளிட்ட பரவலான வளர்ச்சியை அரசு ஏற்படுத்தி வருவதாக கூறினார்.

நாட்டின் மொத்த உற்பத்தியில், தமிழ்நாடு 12.11 சதவீத பங்களிப்பை வழங்கி வருவதாகவும், 8 சதவீதத்திற்கும் மேல் பொருளாதார வளர்ச்சி பெற்று இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதார மாநிலமாக உருவெடுத்திருப்பதாகவும் தெரிவித்தார்.

***********

முதலமைச்சர் பேரவை

தமிழகத்தில் அமைதியான சூழல் நிலவுவதால் தொழில் முதலீடுகள் பெருகி முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருப்பதாக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இதனை தெரிவித்த அவர் மாநிலத்தில் குற்ற சம்பவங்கள் நடைபெறாத வகையில் காவல் துறை சிறப்பாக செயல்படுவதாக குறிப்பிட்டார்.

***********

உதயநிதி - பேரவை

தமிழகம் முழுவதும் உள்ள 25 சிறு விளையாட்டு அரங்கங்கள் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மறு சீரமைத்து மேம்படுத்தப்படும் என்று துணை முதலமைச்சர் திரு.உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் இன்று வெளியான தமது துறைகளின் கொள்கை விளக்க குறிப்பில் இதனைத் தெரிவித்துள்ள அவர்,சர்வதேச மற்றும் தேசிய அளவில் வெற்றிபெற்ற மாற்று திறனாளி வீரர்களுக்கென்று சென்னையில் விளையாட்டு விடுதிகள் அமைக்கப்படும் என்றார்.

சென்னை வேளச்சேரி பகுதியில் உள்ள நீச்சல் குளம் 18 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மறுசீரமைத்து மேம்படுத்தப்படும் என்றும் கூறினார்.

சேலம் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் சர்வதேச தரத்தில் 8 தடங்கள் கொண்ட செயற்கை தடகள ஓடுபாதையுடன் இயற்கை கால்பந்து புல் தரை மைதானம் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்றும் கூறினார்.

திருவள்ளூர் திருவண்ணாமலை தஞ்சாவூர் திண்டுக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் பாரா விளையாட்டு மைதானங்கள் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வட்டாரம் மற்றும் மாவட்ட அளவில் இளைஞர்களிடையே விளையாட்டு கலாச்சாரத்தை ஊக்குவிக்கவும் உடல் திறனை வளர்க்கவும் முதலமைச்சர் இளைஞர் விளையாட்டு திருவிழா 45 கோடி ரூபாய் செலவில் நடத்தப்படும் என்றும் கூறினார்.

சென்னை மற்றும் மதுரையில் 24 நாடுகள் பங்கேற்கும் ஜூனியர் ஆடவர் ஹாக்கி உலக கோப்பை – 2025 போட்டிகள் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வறுமை ஒழிப்பு திட்டங்கள் மற்றும் ஊரக கடன்கள் மானியக்கோரிக்கை தொடர்பான அறிவிப்புகளை வெளியிட்ட துணை முதலமைச்சர் நகர்புற பகுதிகளில் 100 சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு தனியார் நிறுவனங்களுடன் இணைந்து அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் விதமாக 100 மின் ஆட்டோக்கள் வழங்கப்படும் என்று தெரிவித்தார்.

மாநிலத்தில் உள்ள 15 ஆயிரம் சுய உதவிக்குழுக்களுக்கு 22 கோடியே 50 லட்சம் ரூபாய் சுழல் நிதி வழங்கப்படும் எனவும் இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க 2 ஆயிரத்து 500 புதிய சமுதாய திறன் பள்ளிகள் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உருவாக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

மாநிலம் முழுவதும் 100 மாவட்ட அளவிலான வேலை வாய்ப்பு முகாம்கள் மற்றும் இளைஞர் திறன் திருவிழாக்கள் நடத்தப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

**வாய்ஸ்**

***********

**கேள்விநேரம்**

தமிழகத்தில் போதுமான அளவிற்கு சட்ட கல்லூரிகள், சட்ட பள்ளிகள் இருப்பதால் புதிதாக சட்டக்கல்லூரி தொடங்கும் திட்டம் தற்காலிகமாக

நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாக மாநில சட்டத்துறை அமைச்சர் திரு.எஸ்.ரகுபதி தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று கேள்விநேரத்தின் போது இதனை தெரிவித்த அவர் மாநிலத்தில் தலா 12 அரசு மற்றும் தனியார் சட்டக்கல்லூரிகள், 15 நிகர்நிலை பல்கலைகழகங்கள், அம்பேத்கார் மற்றும் திருச்சி சட்டக்கல்லூரிகள் இயங்கிவருவதாகவும் தெரிவித்தார்.

**பேரவையில் கேள்வி நேரத்தின்போது வெளியான மேலும் சில தகவல்கள்**

**பழனி தொகுதி ஆண்டிபட்டி ஊராட்சிபகுதியில்** உள்ள குதிரை ஆற்றின் குறுக்கே 3 கோடியே 25 லட்ச ரூபாய் மதிப்பீட்டில் உயர்மட்ட பாலம் அமைக்கப்படும் என்று மாநில நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன் கூறியுள்ளார்.

பச்சையாறு அணைதிட்டம் தொடங்க மீண்டும் ஆய்வு செய்து வாய்ப்பிருந்தால் அணை கட்டப்படும் என்றார்.

**சேலம் மாநகருக்கு தட்டுப்பாடின்றி தினமும்** குடிநீர் வழங்க அரசு விரைவில் ஏற்பாடு செய்யும் என்று நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

பாதாள சாக்கடை திட்டம் நிறைவேற்றும் பகுதிகளில் குழாய் இணைப்புகளை முடித்துவிட்டு அந்த பகுதியில் சாலைகள் அமைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

சென்னை பகுதியில் 5 கோட்டங்களில் மின்கம்பிகளை புதைவடங்களாக மாற்றியமைக்கும் பணி நடைபெற்றுவருவதாகவும் மீதமுள்ள 3 கோட்டங்களில் புதை வடங்கள் அமைக்க நிதி கிடைத்ததும் அந்த பணிகள் தொடங்கப்படும் என்று மாநில மின்சாரத்துறை அமைச்சர் திரு.செந்தில்பாலாஜி தெரிவித்தார்.

***********

**அஇஅதிமுக வெளியேற்றம்**

முன்னதாக சட்டப்பேரவையிலிருந்து அஇஅதிமுக உறுப்பினர்கள் அனைவரும் இன்று நாள் முழுவதும் வெளியேற்றப்பட்டனர்.

கேள்வி நேரம் முடிந்ததும் எதிர்கட்சி தலைவர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி ஒரு பிரச்சனை குறித்து பேச முற்பட்டபோது, பேரவை தலைவர் திரு.அப்பாவு அனுமதி மறுத்தார்.

எதிர்கட்சிதலைவரை பேச அனுமதிக்க வேண்டும் என்று அஇஅதிமுக உறுப்பினர்கள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டதால் அஇஅதிமுக உறுப்பினர்களை அவையிலிருந்து இன்று நாள் முழுவதும் வெளியேற்ற அவைத்தலைவர் உத்தரவிட்டார்.

***********

**ஆளுநர்**

திருச்சி மேலாண்மை கழகத்தின் 13ஆவது பட்டமளிப்பு விழா நாளை நடைபெறுகிறது.

தமிழக ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பட்டமளிப்பு விழா உரையாற்றுகிறார்.

***********

**கிருஷ்ணா நதி நீர்**

சென்னையில் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் வகையில் ஆந்திரமாநிலம் கண்டலேறு அணையிலிருந்து திறக்கப்பட்ட கிருஷ்ணா நதி நீர் தமிழகம் வந்தடைந்தது.

இந்த தண்ணீர் இன்று இரவு பூண்டி நீர் தேக்கத்தை சென்றடையும் என்று நீர்வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

***********

**இருவரி**

**சிவகங்கை மாவட்டத்தில்** மாநில மற்றும் தேசிய நெடுஞ்சாலையில் அமைக்கப்பட்டுள்ள அரசியல் சங்கங்கள் மற்றும் சமயம் சார்ந்த கொடிகளை 15 தினங்களுக்குள் அகற்ற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் தெரிவித்துள்ளார்.

**திருப்பத்தூர் மாவட்டத்தில் ஆதி திராவிடர்** மற்றும் பழங்குடியினர் நல பள்ளிகளில் பயின்று 12ஆம் வகுப்பு பொது தேர்வு எழுதிய மாணாக்கருக்கு உயர்கல்வி வழிகாட்டுதல் நிகழ்ச்சி நாளை நடைபெற உள்ளதாக ஆட்சித்தலைவர் சிவசௌந்தரவள்ளி தெரிவித்துள்ளார்.

***********

**தூத்துக்குடி**

திருச்செந்தூர் அருகே மணப்பாடு கடற்கரையில் வனத்துறையினரால் பராமரிக்கப்பட்டு முட்டையிட்டு குஞ்சு பொறித்த ஆமைக்குஞ்சுகள் கடலில் விடப்பட்டதாக தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.இளம்பகவத் தெரிவித்தார்.

**வாய்ஸ்**

***********

**அவ்வையார்**

நாகை வேதாரண்யம் அடுத்த துளசியாப்பட்டிணத்தில் நடைபெற்று வரும் அவ்வையார் ஆண்டு திருவிழா இன்று நிறைவடைகிறது.

**இதுகுறித்து எமது செய்தியாளர்**

**வாய்ஸ்**

***********

**கோவில்**

திருவாரூர் ஸ்ரீதியாகராஜசுவாமி திருக்கோவில் பங்குனி உத்திர பெருவிழாவின் ஒருபகுதியாக ஸ்ரீசந்திரசேகரர் சுவாமி பட்டோற்சவ விழா இன்று வெகுவிமாசையாக நடைபெற்றது.

***********

**கிரிக்கெட்**

ஐ.பி.எல். 20-20 கிரிக்கெட் போட்டியில் சென்னையில் இன்று இரவு ஏழரை மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் சென்னை சூப்பர் கிங்ஸ் ராயல் சேலஞ்சர்ஸ் பெங்களூருவை எதிர்கொள்கிறது.

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது**